| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>பாரதிராஜா | EA.1/22 in EP.11/22 in OS.236/2018 | 10.07.2023 |

**PW1 –குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ம.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். ம.சா.ஆ.1 ஆவணத்தில் பொது சந்து என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை தான் எனது தகப்பனாருக்கு எனது தாத்தா ம.சா.ஆ.4 ஆவணம் மூலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். இதை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் எனது தகப்பனார் பெயருக்கு எழுதி வைக்கவில்லை. தாவா சந்து எங்களுக்கும், அசல் நிறைவேற்று மனுவின் மனுதாரருக்கு பொதுவாக பாத்தியப்பட்ட சந்தாகும். தாவா சந்து வருவாய் துறை ஆவணங்களில் எங்களது பெயரிலும், 1ம் வாதி பிச்சை பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவில் எங்களது பெயரும், பிச்சை பெயரும் இருந்ததால் தான் நாங்கள் அதன் பேரில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவிலும், வருவாய்துறை ஆவணங்களிலும் தாவா சந்து தென்வடல் அளவானது மேல்புறம் 4 மீட்டரும், கீழ்புறம் 3.6 மீட்டர் என்று கண்டுள்ளது தவறானதாகும். தாவா சொத்தின் சரியான அளவு என்னவென்றால் எனக்கு அளவுகள் தெரியாது. அசல் வழக்கின் வழக்குரை மற்றும் இந்த நிறைவேற்று மனு ஆகியவை அனைத்தும் ஆங்கிலத்தில் இருந்ததால் அந்த சங்கதிகள் எனக்கு தெரியாது என்பது தான் எனது கட்சி என்றால் அம்மாவிற்கு படிக்கதெரியாது. நான் ITI படித்துள்ளேன். எனது சகோதரிகள் +2 முடித்துவிட்டு மேற்படிப்பு படித்துள்ளனர். நாங்கள் மூவரும் விடுதியில் தங்கி தான் படித்தோம். நான் வழக்கின் மனுவை

படித்து பார்த்துள்ளேன். எனது வழக்கறிஞர் வழக்கு பற்றிய விபரங்களை சொல்லவில்லை. இந்த நிறைவேற்றுகை மனுவானது எங்களை கைது செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது எங்களுக்கு தெரியும். நீதிமன்ற அமீனா மனு சொத்தில் உள்ள இரும்பு கேட்டை அகற்றியதற்கு பின்பு நாங்கள் அந்த இடததில் கேட்டை மீண்டும் பொருத்தவில்லை. கிரில் கேட்டை நாங்கள் மீண்டும் அதே இடத்தில் பொருத்தவில்லை என இந்த மனுவில் எதுவும் மெமோ எழுதிப்போடவில்லை. இந்த நிறைவேற்று மனுவின் மனுதாரர்கள் வீட்டின் வடபுற சுவரில் தாவா சந்துக்கு வருவதற்கு கேட்டுடன் கூடிய நிலை கதவு இருக்கிறதா என்றால் இருக்கிறது. அந்த கேட்டிற்கு முன்பாக இந்த மனுவிற்கு முன் முள்ளை வெட்டிப்போட்டு அந்த கதவை அடைத்தோமா என்றால் இல்லை. தற்போது சென்று பார்த்தால் முள் இருக்குமா என்றால் இருக்காது. நிறைவேற்று மனுவின் மனுதாரர்களின் சாக்கடையானது அவர்களின் வடபுறம் சுவர் வழியாக தாவா சந்துக்கு வருவதை அவர்கள் சுவரை ஒட்டியே இருந்த சாக்கடை வழியாக மேல்புறம் தெருவில் இருந்த சாக்கடையை சென்று சேருமா என்றால் அந்த சாக்கடை அடைக்கப்பட்டுவிட்டது. அந்த சாக்கடையை நாங்கள் தான் அடைத்ததாக மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சாக்கடையை நாங்கள் அடைக்கவில்லை. நிறைவேற்று மனுவின் மனுதாரரின் சாக்கடை நீரை வேறுவழியாக கொண்டு செல்கிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் நிறைவேற்று மனுவின் மனுதாரர்கள் வடபுற சுவற்றில் இருந்த கதவை தாவா சந்திற்கு வரமுடியாதபடி முள்ளை வெட்டிப்போட்டு அடைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவின் மனுதாரர்களின் சாக்கடையை மண்ணை போட்டு நாங்கள் மூடிவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள்

நீதிமன்ற அவமதிப்பு குற்றம் புரிந்துள்ளோம் என்றும், காலதாமதபடுத்துவதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நீதிமன்ற நடிவடிக்கைக்கு பின்பும் தாவா சந்தை அடைத்துவைத்துள்ளோம் என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவின் மனுதாரர்கள் தாவா சந்தை ஆக்கிரமிக்கவில்லை என்றும்., நாங்கள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.